# வடக்குக்கு துப்பறியும் பொலிஸார் படையெடுப்பு

Registered as a Newspaper in Ceylon * விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49

போன் 389

National Tamil Daily

மலர் 9

இதழ் 194

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க ஆவணி 8 ஜு அவ். 17 வியாழக்கிழமை [24-8-67]

## கலவரத்தைதூண்டுவோரின் நடவடிக்கைகளை கவனிப்பர்

காங்கேசன்துறை, புதன்

சமீபத்தில் நடைபெற்ற வடபகுதி கலவரங்களைத் தொடர்ந்து40 இரகசியப் பொலிஸார் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

கலவரங்கள் சப்பந்தமாகவும், அதற்கான காரண கர்த்தாக்களை அவர்களுடன் ஊசாடிக் கண்டுபிடிப்பதுமே அவர்களது முக்கிய நோக்கமெனக் கூறப்பட்டது. இந்தக் கலவரங்களுக்கும், அரசியல் கட்சியொன்றுக்குமிடையில் எவ்வளவு தூரம் தொடர்பு உண்டென்பது பற்றியும், அந்தக்கட்சியைச் சேர்ந்த வடபகுதி முக்கிய 'தலை'களின் இப்போதைய நடவடிக்கைகள் பற்றியும் இந்தத் துப்பறியும் பொலிஸார் அறிந்து கொள்வதற்காகவே இங்கு இந்த துப்பறியும் பொலிஸார் வந்துள்ளாரெனத் தெரிய வருகிறது.

# இலங்கை அதிகாரியுடன் சீனத்தூதர் 'வாய்ப் போர்'

## நள்ளிரவு தொடங்கி காலைவரை நீடித்தது

கொழும்பு, புதன்

**நேற்று நள்ளிரவு முதல் இன்று காலைவரை இலங்கையிலுள்ள சீனத் தூதரகப் பொறுப்பதிகாரியும் இலங்கை பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் வெளியுறவு அதிகாரியும் வாய்ப்போரில் ஈடுபட்டிருந்தனர்.**

பாதுகாப்பு வெளி விவகார அமைச்சு அதிகாரிகளுடன் 'மிக அவசரமான' விஷயம் பற்றிப்பேசுவதற்கு சீனத் தூதரக அதிகாரிகள் அனுமதிகோரினர். நேற்று நள்ளிரவில் தான் அவர்களை வெளியுறவு அதிகாரி திரு. பென்பொன்சேகா சந்திக்கக் கூடியதாக இருந்ததாம்.

நள்ளிரவில் வெளியுறவு அதிகாரியின் காரியாலயத்துக்குச் சென்ற சீனத் தூதரகப் பொறுப்பதிகாரி திரு. லி-யெ-ஷெங் இன்று காலை 5-30 மணிக்குத் தான் அங்கிருந்து புறப்பட்டார்.

சீனத் தூதரகப் பொறுப்பதிகாரி காரியாலயத்திற்குள் நுழைந்ததும் திரு. பொன் சேகாவுடன் ஆத்திரத்துடன் காரசாரமான வார்த்தைகளில் பேசத் தொடங்கினாராம். திரு. பொன் சேகாவும் சூடாகவே பதிலளித்தாராம்.

சியாங்கை ஷேக்கின் தேசிய சீன அரசாங்கத்துடன் இலங்கை அரசாங்கம் இரகசிய உறவுகொண்டிருப்பதாகவும் சீன அரசாங்கத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் இலங்கை அரசாங்கமும் அதிகாரிகளும் ஈடுபட்டிருப்பதாகவும் குற்றஞ்சாட்டிய சீன அதிகாரி இலங்கை அரசாங்கக்கட்சியைச் சேர்ந்த இருவர் தேசிய சீனவுக்குச் சென்றுவந்துள்ளனரென்றும் தெரிவித்தார்.

இலங்கையிலிருந்து தேசிய சீனவுக்குச் சென்ற இரு எம். பி.க்களும் அரசாங்கத்தின் சார்பில் செல்லவில்லையென்றும் தனிப்பட்ட முறையில், தனிப்பட்ட அழைப்பின் மீதே சென்றனரென்றும் திரு. பொன்சேகா தெரிவித்தாராம்.

### பகிஷ்கரிக்க தீர்மானம்

இலங்கையுடன் சீனத் தூதரக அதிகாரிகளும் சீன அரசாங்கமும் நடந்து கொண்டுள்ள முறையைக் கண்டித்து ஸ்ரீலங்கா பால மண்டலய என்னும் ஒரு ஸ்தாபனம் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. கொழும்பிலுள்ள சீனரின் ஹோட்டல்கள், கடைகளைப் பகிஷ்கரிக்கும்படி இயக்கம்ஒன்றை ஆரம்பிப்பதெனவும் அது தீர்மானித்தது.

## "தமிழ் மொழியின் உயர்ச்சியில் தேசீய அரசாங்கம் அக்கறை"

சாவகச்சேரி, புதன்

'ஈராயிரம் வருடங்கட்கு முன் பல மொழிகள் ஆட்சி மொழியாகவிருந்தன. இன்று அம்மொழிகள் பல அழிந்துவிட்டன. ஆனல் தமிழ் மொழி மங்காப் புகழுடன் விளங்குவது குறித்து மகிழ்ச்சிஅடையவேண்டும். தமிழ் மொழி எங்கும் புகழுடன் பிரகாசித்து விளங்குவதற்குக்காரணம் தமிழ்மக்களின் உற்சாகமும் பண்டையபண்பாட்டைப் பேணிக்காத்து வந்ததுமேயாகும்'.

இவ்வாறு தென்மராட்சி இசைக்கலைமன்றத்தின்12-ம் ஆண்டு இசை விழாவின் இறுதிநாள் நிகழ்ச்சி சாவகச்சேரி சந்திரசேகர வாரிவனநாதர் சிவன்கோவில் முன்றலில் நடைபெற்ற போதுவிழாவிற்குத் தலைமை தாங்கிப்பேசிய சாவகச்சேரி எம். பி. திரு. வ. நவரத்தினம் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

"ஒவ்வோர் இடங்களிலும் முத்தமிழ் விழாக்களை எடுத்து தமிழ் மொழியை வளர்க்கவேண்டும். தேசிய அரசாங்கம் தமிழ்மொழிக்கு அந்தஸ்து கொடுத்து அதனை உயர்த்த பல வழிகளில் முயற்சிக்கின்றது. தமிழ் மக்கள் அரசாங்கத்துடன் தமிழிலேயே தொடர்பு கொள்ளவேண்டும். சென்ற பலஆண்டுகளாக இசைவிழா எடுத்து இசையின் மாண்பினை மக்களுக்கு உணர்த்தும் தென்மராட்சி இசைக்கலை மன்றத்தினைப் பாராட்டாதிருக்கமுடியாது. இம் மன்றம் இசையாளரையும் இசைப்பிரியர்களையும் மேலும் வளர்த்துவருவது மகிழ்ச்சிக்குரியதொன்ருகும்."

திருமதி மோகனும்பிகை கணேசன், திரு. என். சண்முகரத்தினம் ஆகியோரின் இசைக்கச்சேரியும் பிரம்மஸ்ரீ எஸ். சோமாஸ்கந்த சர்மா, பிரம்மஸ்ரீ எஸ். வைத்தீஸ்வர ஐயர் ஆகியோரின் வயலின்இசையும், திரு எம். கே. பத்மநாத பிள்ளை, திரு. எம். பஞ்சாபிகேசபிள்ளை கோஷ்டியினரின் நாதஸ்வரமும், திரு. எஸ். குமரகுரு, திரு. என். நடராசசுந்தரம் கோஷ்டியினரின் தவில் கச்சேயும் திரு. ஏ. எஸ். இராமநாதன் பிரம்மஸ்ரீ வி. நாகேந்திரசர்மா ஆகியோரின் மிருதங்கக் கச்சேரியும் இடம்பெற்றன.

## செல்வச்சந்நிதி பூஜையில் ஜி. ஜி. யும் பிரதிநிதிகளும் நாளை அதிகாலை கலந்து கொள்வர்

வல்வெட்டித்துறை, வியாழன்

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும், மகாநாட்டு பிரதிநிதிகளும் தொண்டமானுறு செல்வச்சந்நிதி கோவிலில் நாளை காலை 7 மணிக்கு நடைபெறும் பூஜையில் கலந்துகொள்வர். பருத்தித்துறையில் நாளை காலை தமிழ்க்காங்கிரஸ் 22-வது மகாநாடு ஆரம்பமாவதை யொட்டி முதல் நிகழ்ச்சியாக இது நடைபெறுகிறது. பின்னர் இங்கிருந்து வல்வெட்டித்துறைக்குச் செல்வர். அங்கு வல்வெட்டித்துறை தமிழ்க் காங்கிரஸ் கிளை வரவேற்பு கமிட்டி வரவேற்கும்.

இதனையடுத்து நடைபெறும் வள்ளப் பவனிக்கான ஏற்பாடுகள் எல்லாம் இப்போதுபூர்த்தியாகிவிட்டன. தமிழ்க் காங்கிரஸ் நான்கு வர்ணக் கொடிகள் பறந்து கொண்டிருக்கும் 25 வள்ளங்களில் தலைவர் பொன்னம்பலமும், மற்றும் தலைவர்களும் முன்னே அலங்கரிக்கப்பட்ட வள்ளத்தில் செல்ல, பவனி ஆரம்பமாகும்.

### திருநாளும் ஞானவொடுக்கமும்

பண்டத்தரிப்பு, புதன்

இளவாலை அர். அன்னம்மாள் ஆலய வருடாந்த திருநாளுடன் ஞான வொடுக்கமும் நடைபெறவிருக்கிறது. திருநாளுக்காயத்தமாக நவநாள் ஆராதனைகள் 29-ம் திகதி ஆரம்பமாகி நடைபெறும். 8-ம்திகதியுடன் திருநாள் முடிவடையும்.

வடபகுதி அசைஸ் விசாரணை

## மன்னர் கொலை முயற்சி வழக்கு: 1-ம் எதிரிக்கு 3 வருட கடூழியம்

யாழ்ப்பாணம், வியா.

மன்னர் உயிலங்குளம் கொலை முயற்சி வழக்கில் முதலாவது எதிரி முத்து மார்க்கண்டுவிற்கு மூன்று வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. 2-ம் எதிரியான செல்லையா அருளம்பலம் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டார்.

இவ் வழக்கில் 1965-ம் ஆண்டு மார்ச் மாதம் 25-ம் தேதி மன்னர் உயிலங்குளத்தில் சந்திரசேகரம் கந்தப்பு என்பவரை முத்து மார்க்கண்டு, செல்லையா அருளம்பலம் ஆகியோர் கொலை செய்ய முயற்சித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் கே.வி. எஸ். சண்முகநாதன் புறக்டர் எஸ். லோகேஸ்வரனின் அனுசரணையுடன் ஆஜரானர். எதிரிக்காக அரசாங்கத்தால் அட்வகேட் எஸ். ஸ்ரீநிவாசன் நியமிக்கப்பட்டிருந்தார்.

இவ்வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வி. மாணிக்கவாசகர் முன்னிலையில்இரண்டாவது தினமாக விசாரணை நடைபெற்ற பின் 1-ம் எதிரிக்கு 3 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

## வல்வைக்கு விரைவில் குடிநீர் விநியோகத் திட்டம்

வல்வெட்டித்துறை, புதன்

வல்வெட்டித்துறை பட்டின சபை பகுதிக்கு குடிநீர் விநியோகத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு உள்ளூராட்சி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

வல்வெட்டித்துறை பகுதிக்கு குடிநீர்ப்பிரச்னை கடந்த பல வருட காலமாக பெருத்த பிரச்னையாக இருந்து வருவதாகவும், இதனல் இப்பகுதி மக்கள் பெருத்த கஷ்டத்துக்குள்ளாவதாகவும் தூரமான இடங்களுக்கு நடந்து சென்று குடிநீரை எடுத்து வர வேண்டிய கஷ்டத்துக்குள்ளாவதாகவும் பருத்தித்துறை எம்.பி. திரு. சே. துரைரத்தினமும், வல்வெட்டித்துறை பட்டினசபைத் தலைவர் திரு. வி. எம். இரத்தினவடிவேலும் உள்ளூராட்சி அமைச்சரிடம் தெரிவித்துக்

[6-ம்பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தன்னுடைய குற்றங்களைப் பிறருக்கெதிரே நியாயமாக ஒப்புக்கொண்டு, அம்மாதிரிக் குற்றங்களை மறுபடியும் செய்யவில்லை என்று உறுதி செய்வதைக் காட்டிலும் அந்தக் குற்றங்களைப் போக்கிக் கொள்வதற்கு வேறு சிறந்த வழியே கிடையாது.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு

Eelanadu Natlional Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஹூ ஆவணி ௴ 8உ (24-8-67

## பதவிக் காலம்

"பார்லிமெண்டின் இப்போதைய ஆயுட்காலம் நீடிக்கப்பட மாட்டாது" என்று பிரதமர் திரு. டட்லி சேனநாயகா ஜனப்பிரதிநிதிகள் சபையில் உறுதி அளித்து, எதிர்க்கட்சி அங்கத்தவர் சிலரின் அச்சத்தை நீக்கியிருக்கிறார். அதாவது இன்று ஆட்சியிலிருக்கும் திரு. டட்லி சேனநாயகாவைப் பிரதமராகக் கொண்ட தேசிய அரசாங்கம் தனது ஐந்து வருடப் பதவிக் காலம் முடியும்வரை ஆட்சியிலிருக்குமென்றும் அதன் பின்னர் ஆட்சிக் காலத்தை நீடிக்க மாட்டாதென்றும் பிரதமர் தெரிவித்திருக்கிறார்.

எதிர்க் கட்சித் தலைவர்களில் ஒருவரான டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வா எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார். முன்னைய அரசாங்கங்களின் ஆட்சிக் காலத்தின போதும் இடையிடையே இப்படியான கேள்விகள் எழுந்ததும் அவர்கள் இதுபோன்ற பதில் அளித்ததும் உண்டு. தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இரண்டரை வருடங்கள் தாணுகின்றன. இதற்குள் அடுத்த தேர்தலைப் பற்றி ஏன் இந்த அக்கறை. பார்லிமெண்டின் ஆயுட் காலத்தை நீடிக்க வேண்டுமென்ற யோசனை எதுவும் பார்லிமெண்டுக்குள் தெரிவிக்கப் பட்டதாகத் தெரியவில்லை. பல மாதங்களுக்கு முன் ராஜாங்க அமைச்சர் ஜே. ஆர். ஜயவர்த்தனு ஒருவைபவத்தில் பேசுகையில் ஜனநாயக அமைப்பின் சில அம்சங்கள் பற்றி நன்கு பரிசீலனை செய்வது நல்லதென்றும் ஐந்து வருட ஆட்சிக் காலத்தில் முன்னிரண்டு வருடங்கள் தேர்தல் வெற்றியைக் கொண்டாடவும் பின்னிரண்டு வருடங்கள் அடுத்த தேர்தலுக்கு ஆயத்தம் செய்யவுமே சரியாகி விடுகிறதென்று "உண்மை நிலையை" எடுத்துக் கூறியிருந்தார். அந்தச் சமயம் அவர் தெரிவித்த இந்தக் கருத்துக்கு ஆதரவோ எதிர்ப்போ வெளிவராததால் அத்துடன் அது மறைந்து விட்டது.

ஜனநாயக நாடுகளில் பார்லிமெண்டின் கால எல்லை நீடிக்கப் படுவது மிகமிக அரிது. யுத்த காலத்தில் மட்டும் அப்போது பிரிட்டிஷ் பிரதமராக இருந்த சேர் வின்ஸ்டன் சோச்சில், பிரிட்டிஷ் பார்லிமெண்டின் ஆயுட் காலத்தை நீடித்தார். இந்தியாவில் எல்லைப் பிரச்னைகளைத்தொடர்ந்து தேசிய நெருக்கடிகள் ஏற்பட்ட போதும் பார்லிமெண்டின் ஆயுட்காலம் நீடிக்கப்படவில்லை. பொதுத் தேர்தல் உரிய காலத்தில் நடை பெற்றது. அங்கும் எதிர்க்கட்சியினர் இது போன்று அடிக்கடி கவலை தெரிவித்து வந்ததும் உண்மையே.

இலங்கையில் பல பிரச்னைகளிருப்பினும் பார்லிமெண்டின் ஆயுட் காலத்தை நீடிக்க வேண்டிய பெரும் நெருக்கடி எதுவும் இன்னும் ஏற்படவில்லை.

இதற்குள் அதன் ஆயுட்காலத்தைப் பற்றியும் அடுத்த தேர்தல் பற்றியும் ஏன் இவ்வளவு அக்கறை? உணவு நெருக்கடி, விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னை முதலிய பலவேறு பிரச்னைகளுடன் இலங்கையுடனான சீனுவின் உறவும் பாதிக்கப்படக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது. அடுத்த வருடம் அரிசி கிடைக்குமா என்பதும் சந்தேகம். இந்நிலையில் தேசிய ஐக்கியத்தை உருவாக்கி நாட்டு மக்களையும் நாட்டையும் பாதுகாக்கவும் முன்னேற்றவும் முன் வந்து மக்களுக்கு வழி காட்ட வேண்டியவர்கள் ஒருவர் மீது ஒருவர் குறை கூறிக்கொண்டிருப்பது வேதனையளிப்பதாகும். நாட்டின் நிலைமையை, எதிர்க் கட்சித் தலைவர்களை அழைத்து பிரதமர் எடுத்துக் கூறி அவர்களின் ஒத்துழைப்பைக் கோர வேண்டும். எதிர்க் கட்சிகளும் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும்.

# 'சங்கங்கள் பெயரளவில் மட்டும் இருந்தால் போதாது'

## ஆண்டுவிழாவில் சாவகச்சேரி எம்.பி.

மீசாலை, புதன்

"சனசமூக நிலையங்கள், முன்னேற்றச் சங்கங்கள் நாட்டில் பெயரளவில் மட்டும் இருந்தால் போதாது. கலை, கலாச்சாரம், மொழி வளர்ச்சி வழிகாட்டிகளாக இயங்க வேண்டும்."

சரசாலையில் சன சமூக நிலைய ஆண்டு விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில், சாவகச்சேரி எம். பி திரு. வி. என். நவரத்தினம் கூறினர்.

வடபகுதி மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் பேசுகையில் கூறியதாவது:-

"ஒரு காலத்தில் எங்கள் நாடு உணவுப் பொருட்களை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நிலையிலிருந்தது. ஆனால் இன்று வெளி நாட்டு உணவுக்குக் கையேந்தி நிற்கின்ற ஒரு அவல நிலை ஏற்பட்டிருக்கின்றது. இந்நிலை மாற வேண்டும்.

அப்போது தேசிய அரசாங்கம் விவசாயிகளுக்கு முதலிடம் அளிக்கிறது ஆகையால் இளைஞர்கள் விவசாயத்துறையில் ஈடுபட்டு நாட்டின் வளர்ச்சிக்கு உழைக்க வேண்டும்."

மற்றும் பலரும்பேசினர்.

# 'பௌத்த பாடசாலைகளை கையேற்கவும்'

## மல்வத்த பீடாதிபதியிடம் தூதுக்குழு

புன்னாலைக்கட்டுவன், புதன்

"அச்சுவேலி, புத்தூர், அல்வாய், கரவெட்டி, பூநகரி ஆகிய இடங்களில் இயங்கிவரும பௌத்தபாடசாலைகளை அரசாங்கம் உடனடியாகக் கையேற்கவேண்டும் என வற்புறுத்தும் நோக்கமாக அகில இலங்கைத் தமிழர் பௌத்த மகாசபைத் தலைவர் திரு. ம. வைரமுத்து தலைமையில் ஒரு தூதுக்குழு, மல்வத்த பீடாதிபதியைக் காண நேற்று முன்தினம் கண்டிக்குச் சென்றுள்ளது.

அண்மையில் நடைபெற்ற கலவரங்கள் மூலம், சிறுபான்மைத் தமிழ்மக்களுக்கு ஏற்பட்ட நஷ்டங்களுக்கு ஈடுசெய்யவேண்டுமென்றும் உடனடியாக சமூகக் கட்டுப்பாட்டுச் சட்டத்தைச் செயற்படுத்த வேண்டுமென்றும், பாடசாலை தொடர்பான விடயங்களில் எம். பிக்களின் தலையீடு தவிர்க்கப்படல் வேண்டுமென்றும் இக்குழு மல்வத்த பீடாதிபதியை வற்புறுத்தும்.

கலவரம் பற்றி விசாரிக்க பிரதமர் வடபகுதிக்கு அனுப்பவிருக்கும் ஆணைக்குழுவின் அறிக்கை வெறும் கண்துடைப்பாக இருக்கக்கூடாதென்றும் இக்குழு பீடாதிபதியைக் கேட்கும்.

### அழைப்பு

இது இவ்வாறிருக்க, வடபகுதியில் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்குக் காட்டப்படும் பாரபட்ச நீதிகள் பகிரங்க ஸ்தானங்களில் ஏற்றத்தாழ்வு ஆகிய காரணங்களைக் காட்டி சிறுபான்மைத் தமிழரை புத்தரின் ஏற்றத்தாழ்வற்ற அன்புமார்க்கத்தைத் தழுவுமாறு கோரும் ஆயிரக்கணக்கான துண்டுப்பிரசுரங்களை, அகில இலங்கைத் தமிழர் பௌத்த மகாசபைத் தலைவர் திரு. ம. வைரமுத்து குடாநாடு முழுவதும் வெளியிட்டுள்ளார்.

## பண்ணாகம் தெற்கு ச.ச.நிலையம் கோரிக்கை

சுழிபுரம், புதன்

பண்ணாகம் தெற்கு ஸ்ரீ முருகன் சன சமூக நிலையத்தினர் பண்ணாகம் உபதபால் கந்தோர் தபால் கட்டும் நேரத்தை நாலுமணிவரையாக்கி பஸ்வண்டி மூலம் மெயில் அனுப்பவேண்டிய நடவடிக்கைகளை உடன் செய்துதரும்படி தபால் மாஅதிபரையும், தபால் அமைச்சரையும் வேண்டியுள்ளனர். வேண்டிய முத்திரைகளை பெற்றுக் கொள்ளமுடியாமலும் பென்ஷன் பணம், மணியோடர் மாற்றுதல் போன்றவற்றை உடன்செய்யமுடியாமல் மக்கள் கஷ்டப்படுவதால் இவ் வசதிகளையும் உடன் செய்து தரும்படி கேட்டுள்ளனர்.

## கவிஞர்கள் பாடுவர்

### காங்கிரஸ் மகாநாட்டில்

யாழ்ப்பாணம், வியா.

பருத்தித்துறையில் நடைபெறவிருக்கும் தமிழ்க் காங்கிரஸ்மகாநாட்டையொட்டி நடைபெறவிருக்கும் கவிதைப் போட்டிக்கு 25 கவிதைகள் வந்திருக்கின்றன.

முதல் ஐந்து உயர்தரமான கவிதைகள் மகாநாட்டில் அரங்கேற்றப்படும். இந்த ஐந்து கவிதைகளையும் இயற்றியவர்கள் [illegible] களைப் பாடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்துளுத் திட்டம்

## அமைச்சர் அடிக்கல் நாட்டுவார்

புன்னாலைக்கட்டுவன், புதன்

அத்துளுத் தண்ணீர்த் திட்டத்துக்கான அத்திபாரக்கல் நாட்டுவதற்காக. உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம், அடுத்த மாதம் 9-ம் திகதி உடுப்பிட்டித் தொகுதிக்கு உத்தியோகபூர்வமாக விஜயம் செய்யவிருக்கிறார் இதற்கான ஏற்பாடுகளை நெல்லியடிப் பட்டின சபை விசேஷ ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர் மேற்கொண்டுள்ளார்.

## சாரணச் சிறுவனின் பெருந்தன்மை

உடுப்பிட்டி, புதன்

கோவில் வீதியில் கண்டெடுத்த தங்கச்சங்கிலியை உரியவரிடம் ஒப்படைத்த சாரணச்சிறுவனின் பெருந்தன்மையை இங்கு பலரும் பாராட்டினர்.

கரணவாய் தெற்கைச் சேர்நத கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரி சாரண மாணவரான செல்வன் ஐ. சி. மகாலிங்கம் என்பவர் தொண்டமனுறு செல்வச்சந்நிதி கோவிலில் சாரணராகக் கடமைபுரிந்துகொண்டிருந்தபொழுது ஆலயமுகப்பில் சுமார் 500 ரூபா பெறுமதியான 4 பவுண் நிறையுடைய தங்கச்சங்கிலி ஒன்றைக் கண்டெடுத்து வல்வெட்டித்துறைப் பொலிஸ் சார்ஜண்டின் உதவியுடன் தனது சங்கிலியைப் பறிகொடுத்துத் தவித்த சாவகச்சேரியைச்சேர்ந்த பெண்மணியொருவரிடம் ஒப்படைத்தார்.

சுழிபுரம், புதன்

பொன்னாலையில் நீர்ப்பாசன இலாகா நிபுணர்கள் நடாத்திய தண்ணீர் ஆராய்ச்சியில் எதிர்பார்த்தளவு நீர் கிடைக்கும் சாத்தியம் இல்லாததுகண்டு தமது ஆராய்ச்சியை நிறுத்திக்கொண்டனர் இனி காரைநகர்ப் பிரிவில் நீர்ஆராய்ச்சி செய்வர்.

## இன்றைய பலன்

24-8-67
வியாழக்கிழமை
ஆவணி மாதம் 8-ம் திகதி
நட்சத்திரம் - ரேவதி
திதி- சதுர்த்தி பி.ப. 1-48 வரை மேல் பஞ்சமி
சுபநேரம்- 7-35-9-05
ராகுகாலம்- 1-35-3-05

மேடம்- தெய்வ அருள், தேடிவரும் நன்மை
ரிஷபம்- காதலிக்காதே கவலைப்படாதே
மிதுனம்- சொந்தமும், பந்தமும் படைஎடுத்து வரும்
கடகம்- உள்ளத்தில் உறுதி, உவகை தரும் நாள்
சிங்கம்- திருடர் பயம், திகைப்பு
கன்னி- உறவுக்கு ஒருத்தி உரிமையுடன் வருவாள்
துலாம்- தாமத சித்தி, தருமசிந்தை
விருச்சிகம்- அன்பு மனம் அபிவிருத்தி
தனுசு- நிம்மதிக்குறைவு பிரயாணம்
மகரம்- இன்பம் பொங்கும், இனியவை நடக்கும்
கும்பம்- இதயக் குமுறல், இடர்
மீனம்- சகோதரர்களால் சஞ்சலம்

—சோதிடக்கலாநிதி—
திருமலை வேலுப்பிள்ளை

(5-ம் கலத்தொடர்ச்சி)

இதை எமது அரசாங்கமும் கண்டி கோயில் அதிகாரிகளும் உணர திருப்பது விந்தையிலும் விந்தையே!

— வழிப்போக்கன்

## நாட்டிலும் நகரிலும்

அமெரிக்க உல்லாசப் பிரயாணி ஒருவர் சில மாதங்களுக்கு முன்பு இலங்கையை சுற்றிப் பார்த்துவிட்டு சொன்னர்: "இலங்கைத் தீவில் சீதோஷ்ண வேற்றுமையுள்ள நுவரெலியா, நீர்கொழும்பு, கண்டி, அநுராதபுரம் முதலிய இடங்களை நாம் பார்க்க விரும்பவில்லை. எங்கள் அமெரிக்க நாட்டிலேயே இப்படி சீதோஷ்ண மாற்றத்தினுல் வேறுபட்ட பல இடங்கள் இருக்கின்றன. பத்தாயிரம் மைல்கள் பிரயாணம்செய்து நாங்கள் வருவது இந்த நாட்டில் இருக்கும் சில விசேஷமான காட்சிகளைப் பார்ப்பதற்குத்தான்".

உல்லாசப்பிரயாணிகள் இங்கு வந்து சில நாட்கள் தங்கிப்போவதால் எமக்கு வருமானம் உண்டு. அமெரிக்க டாலர் ஒன்றின் பெறுமதி இங்கே சுமார் நாலரை ரூபாய். பிரிட்டிஷ் பவுணின் பெறுமதி இங்கே சுமார் பதினன்கரை ரூபாய்.

அமெரிக்காவிலிருந்தும், பிரிட்டனிலிருந்தும் பணக்காரக் கோடீஸ்வரர்கள் இங்கு வந்து சில நாட்கள் தங்கியிருந்தால் அவர்கள் இங்கே செலவழிக்கும் டாலர்களும் பவுண்களும் எமக்கு அன்னியசெலாவணியில் மிச்சமாகிறது.

அவர்களை இங்கு வரும்படி தூண்டுவதற்கு என்ன மார்க்கம் இருக்கிறது?

மேற்கூறிய அமெரிக்கர் சொன்னதுபோல எமது இயற்கைக் காட்சிகளை மட்டும் காட்டி 'இதுதான் தேவலோகம்' என்று கூறுவதில் வேலையில்லை.

அமெரிக்கர் இயற்கை அழகுகளை ரசிக்கவேண்டுமென்றல் இலங்கைக்கு வரத்தேவையில்லை. அவர்களுக்கு மிக அண்மையில் உள்ள ஹவாய் முதலிய பசுபிக்தீவுகளுக்குப் போகலாம்.

நாம் அவர்களைக் கவர வேண்டுமானல் எமது நாட்டிலுள்ள விசேஷமான, விசித்திரமான விஷயங்களை அவர்களுக்கு பிரபலமாக்க வேண்டும்.

ஆடிவேல்விழா நடந்தபோது கொழும்புக்கு வந்திருந்த ஒரு பிறநாட்டவர் கோஷ்டி, காவடி நடனம், நட்டுவமேளம், கம்படி சிலம்படி முதலிய வேடிக்கைகளை சினிமாப்படம் பிடித்ததாம்.

பிறநாட்டவர் இலங்கையில் பார்க்கவிரும்புவது என்னவென்று இதிலிருந்து தெரியவருகிறது.

கதிர்காமம், நல்லூர், சந்நதி, கண்டி, களனி முதலிய இடங்களில் நடைபெறும்இலங்கைக்கே தனித்துவமான காட்சிகளைத்தான் பார்க்க விரும்புவார்கள். இக் காட்சிகளைக்கொண்டே பிறநாட்டவர்களைக் கவர முயலவேண்டும்.

கண்டியில் நடைபெறும் ஏசாலை பெரஹேரா காட்சிகளை பிரிட்டனிலிருந்து டெலிவிஷன் படம்எடுக்க வந்த கோஷ்டியை கோயில் அதிகாரிகள் தடுத்து நிறுத்திவிட்டார்களென்ற செய்தியைக் கேட்க வருத்தமாய் இருக்கிறது.

பிரதம மந்திரியார் கூட இதில் தலையிட்டு அந்த டெலிவிஷன் கோஷ்டி படமெடுக்கமுடியாமல் போய்விட்டதாம்.

வெளிநாடுகளிலிருந்து எவ்வளவோ பணத்தை செலவழித்து இங்கு படமெடுக்கவிரும்பும் ஒரு கோஷ்டியை தடுப்பதால் அவர்களுக்குண்டாகும் நஷ்டத்தைவிட எமக்குத்தான் கூடுதலான நஷ்டம் ஏற்படுகிறது.

[4-ம் கலம் பார்க்க]

# பீகிங்கில் பிரிட்டிஷ் தூதரகம் தரைமட்டம்

# கட்டிடத்துக்கு தீவைப்பு; அதிகாரிகளுக்குஅடி

## லண்டனில் பிரிட்டன் பதில் நடவடிக்கை

பீகிங், ஆக. 23

**சீனக் கும்பல்கள், பீகிங்கிலுள்ள பிரிட்டிஷ் தூதரகக் கட்டிடத்தினுள் நுழைந்து, சூறையாடி, கட்டிடத்தைத் தீ வைத்துக் கொளுத்தித் தரைமட்டமாக்கியுள்ளன. தூதரக அதிகாரிகளும், ஊழியர்களும் அடித்துக் காயப்படுத்தப் பட்டுள்ளனர்.**

**பீகிங்கிலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்துக்கும் லண்டனிலுள்ள வெளியுறவுக் காரியாலயத்துக்குமான ரேடியோ தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.**

பீகிங்கிலுள்ள பிரிட்டிஷ் தூதரக ரேடியோ இயக்குநர், 'கும்பல்கள் கட்டிடத்துக்குள் நுழைகிருர்கள்....' என்று பிரிட்டிஷ் வெளியுறவுக் காரியாலயத்துக்குச் செய்தி அறிவித்துக் கொண்டிருக்கையில், அச் செய்தி நடுவில் முறிக்கப்பட்டது அதன் பின்னர், எந்த நேரடிச் செய்தியும் பீகிங்கிலுள்ள தூதரகத்திலிருந்து பிரிட்டனுக்குக் கிடைக்கவில்லை.

ஆனால், பிரிட்டனின் நட்பு நாடொன்றிடம் இருந்து கிடைத்த செய்தியின் படி, பிரிட்டிஷ் தூதரக அதிகாரிகளும், ஊழியர்களும் பத்திரமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே செய்தி, பிரிட்டிஷ் தூதரகத்தைச் சேர்ந்த பலர் இரத்தக் காயங்களுடன் காணப்பட்டதாகவும், அவர்களில் ஒருவர் பிரிட்டிஷ் தூதரகப் பொறுப்பதிகாரியாவாரென்றும்மேலும் கூறியுள்ளது.

பீகிங்கிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களுக்குத் தற்போது பொறுப்பதிகாரியாகவுள்ள ஐக்கிய அரபுக் குடியரசுத் தூதுவர், சீன வெளியுறவு மந்திரி திரு. சென் யீயைச் சந்திக்க எடுத்துக் கொண்ட முயற்சிகள் இதுவரை வெற்றி பெறவில்லை எனத் தெரிய வருகிறது

### வில்சனுக்குச் செய்தி

பீகிங் சம்பவங்கள் பற்றி தற்போது பிரிட்டனுக்கு வெளியே விடுமுறையைக் கழித்துக் கொண்டிருக்கும் பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சனுக்கும், வெளியுறவு மந்திரி திரு. பிரவுனுக்கும் உடனடியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நோர்வேயில் விடுமுறையைக் கழித்துக் கொண்டிருக்குப் பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி திரு. பிரவுண், செய்தியைக் கேள்விப் பட்டதும், தமது விடுமுறையை ரத்துச் செய்து விட்டு உடனடியாக லண்டன் திரும்பியுள்ளார்.

### கடுமையான ஆட்சேபம்

இதற்கிடையில், லண்டனிலுள்ள சீனத் தூதரகத்தின் பொறுப்பதிகாரி திரு. சென் பின், பிரிட்டிஷ் ராஜ்ய மந்திரி திரு. தொம்ப்ஸனுல் பிரிட்டிஷ் வெளியுறவுக் காரியாலயத்துக்கு அழைக்கப்பட்டார்.

திரு. தொம்ப்ஸன் திரு. சென் பின்னிடம். பீகிங் சம்வங்களை ஆட்சேபிக்கும் பிரிட்டனின் கடுமையான ஆட்சேபக் குறிப்பினைக் கையளித்தார்.

அக்குறிப்பில், பீகிங்கிலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்தின் மீதான தாக்குதல் 'மிருகத்தனமான, அநாகரிகமற்ற செயலாகும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நாகரிகச் செயல், சீனவை மேலும் உலக நாடுகளிடையே அபகீர்த்திக்குள்ளாக்குமென்றும், பிற நாடுகளின் சுயாதிபத்திய உரிமைகளைச் சீன எவ்வளவு தூரம் உதாசீனம் செய்து வருகிறதென்பதை எடுத்துக் காட்டுகிறதென்றும் அக்குறிப்பு மேலும் தெரிவித்துள்ளது.

பிரிட்டிஷ் தூதரகத்தின் மீதான தாக்குதல், சீன அரசாங்கத்தினல் வேண்டுமென்றே தூண்டப்பட்ட தொன்ருகுமெனவும் பிரிட்டிஷ் ஆட்சேபக் குறிப்பு குற்றஞ் சாட்டியுள்ளது.

பிரிட்டிஷ் தூதரகம் மீதான தாக்குதல் பற்றிய அறிக்கையைச் சமர்ப்பிப்பதுடன், கட்டிடத்திக்கு ஏற்பட்டுள்ள சேதத்துக்கு முழு நஷ்டஈடு அளிக்கவேண்டுமென்றும் பிரிட்டிஷ் தூதரக அதிகாரிகள், ஊழியர்கள் அனைவருக்கும் பாதுகாப்பு அளிப்பதென்ற உறுதியைத் தரவேண்டுமென்றும் சீனப் பொறுப்பதிகாரியிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நடமாட்டத்துக்கு தடை

பிரிட்டிஷ் தூதரகம் தாக்கப்பட்டதையும், நேரடியாகத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டதையும் தொடர்ந்து பிரிட்டனிலுள்ள சீனத் தூதரக அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோரின் நடமாட்டங்கள் மீது பிரிட்டன் தடைவிதித்துள்ளது.

பிரிட்டனிலுள்ள சீனத் தூதரகத்தைச் சேர்ந்தவர்கள் எவரும் பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் முன்னதாக அனுமதி பெருமல், பிரிட்டனைவிட்டு வெளியேறக் கூடாது என பிரிட்டன் அறிவித்துள்ளது.

அத்துடன், லண்டனுக்கு 5 மைல்தூரத்துக்குள்ளேயே சீனத் தூதரகத்தினர் நடமாடுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. அதற்கும் அப்பால் அவர்கள் செல்ல விரும்பினுல், அவர்கள் 48 மணி நேரத்துக்கு முன்னதாகவே பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் அனுமதி பெறவேண்டும்.

பீகிங்கிலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்தின் றேடியோத் தொடர்புகள் திரும்பவும் வேலை நிறுத்தப்படும்வரை, லண்டனிலுள்ள சீனத் தூதரக ரேடியோ வசதிகள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

### மௌனம்

பீகிங்கில் பிரிட்டிஷ் தூதரகம் தாக்கப்பட்ட சம்பவம்பற்றிச் சீனச் செய்தித் தாபனம்இதுவரை மௌனத்தைக் கடைப்பிடித்து வருகிறது.

பீகிங் ரேடியோ மட்டும், ஹொங்கொங் பத்திரிகைகள்மீதான தடையை பிரிட்டன் விலக்க மறுத்திருப்பதைக் கண்டித்துள்ளது. சீனமக்களின் நியாயமான உரிமைகளை பிரிட்டன் நிராகரித்துள்ளதாக அந்த ரேடியோ குற்றஞ் சாட்டியது.

பீகிங்கில் பிரிட்டிஷ் தூதரகம் தாக்கப்பட்ட சம்பவம்பற்றிய விபரங்கள், அங்குள்ள பிரெஞ்சு செய்தித் தாபனம் ஒன்றிடமிருந்து கிடைத்துள்ளன.

[4-ம் பக்கம் பார்க்க]

## கீன்யா, டென்மார்க்கிடம் பீகிங் ஆட்சேபம்

பீகிங், ஆகஸ்ட் 23

சீனவுக்கெதிரான துவேஷ நடவடிக்கைகள் யாவற்றையும் உடனடியாக நிறுத்திக் கொள்ளுமாறு சீன, கீன்யாவை எச்சரித்துள்ளது.

கீன்யா உபஜனதிபதி, சீனவுக்கெதிராகச் சதி நடவடிக்கைகள் மேற்கொள்வதாகவும் சீன குற்றஞ்சாட்டியுள்ளது.

### டென்மார்க் நிராகரித்தது

இதற்கிடையில், கொப்பன் ஹேகன் பத்திரிகையொன்றில் வெளியான சீனத் தலைவர் மா-சே-துங்கின் கேலிச் சித்திரத்தையிட்டுச் சீன டென்மார்க்கிடம் தெரிவித்த ஆட்சேபனையை டென்மார்க் நிராகரித்துள்ளது.

அக் கேலிச்சித்திரத்தை வெளியிட்டதானது ஒரு தனியார் ஸ்தாபனத்தின் செயலென்றும், அதை அரசாங்கக் கட்டுப்பாட்டுக்குட்படுத்த முடியாதெனவும் டென்மார்க் சீனவுக்குப் பதிலளித்துள்ளது.

## பல்கலைக்கழக கட்டத்தில் போதன மொழி

### பிராந்திய மொழியாகவே இருக்க வேண்டும்

புதுடில்லி, ஆக. 23

பல்கலைக்கழகக் கட்டத்தில் பிராந்திய மொழியே போதன மொழியாக இருக்க வேண்டுமெனப் புதுடில்லியில் கூடிய ராஜ்ய கல்வி அமைச்சர்கள் மீண்டும் வலியுறுத்தியுள்ளனர்.

ராஜ்ய பிராந்திய மொழிகளின் அபிவிருத்திக்கென ரூபா 18 கோடியை மத்திய அரசாங்கம் ஒதுக்கியுள்ளதாக மத்திய கல்வி மந்திரி திரு. திருகுண சென் இம் மகாநாட்டில் தெரிவித்தார்.

தமிழக கல்வி மந்திரி திரு. இரா. நெடுஞ்செழியன் பேசுகையில், தமது ராஜ்யத்தில் உள்ள மூன்று பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களும், பல்கலைக்கழகக் கட்டத்தில் இறுதியாக பிராந்திய மொழியே போதனமொழியாக இருக்கவேண்டுமென்பதை ஒப்புக் கொண்டுள்ளார்களென்று கூறினர். ஆனாலும் இவ்விஷயத்தில் அதிகாரிகளின் மெதுவான நடவடிக்கையையே தூ[illegible] கள் ஆதரிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## சூயஸ் கால்வாய் திறக்கப்பட மாட்டாது

### இஸரேல் துருப்புகள் இருக்கும்வரை

கெய்ரோ, ஆக.23

சூயஸ் கால்வாய்க்கருகே இஸ்ரேல் துருப்புகள் இருக்கும் வரை ஐக்கிய அரபுக் குடியரசு சூயஸ் கால்வாயைத் திறக்கமாட்டாது என்று கெய்ரோப் பத்திரிகையான 'அல் அஹ்ராம்' கூறியுள்ளது.

பாக்தாத்தில் அண்மையில் நடந்து முடிந்த அரபு பொருளாதார, நிதி, எண்ணை மந்திரிகள் மகாநாட்டில் ஐ. அ. கு. பொருளாதார மந்திரி தெரிவித்ததாக 'அல் அஹ்ராம்' அறிவித்துள்ளது.

சூயஸ் கால்வாய்12வாரங்களாகப் போக்கு வரத்துக்கு மூடப்பட்டுள்ளது.

## பிரதமர் இந்திரா காந்தி தமிழ் நாட்டுக்கு விஜயம்

புதுடில்லி, ஆக.23

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இன்று காலை இங்கிருந்து சென்னை புறப்பட்டுள்ளார். அவர் ஒய்வு எடுப்பதற்காகத் தமிழ் நாடு செல்கிருர்.

கடந்த பொதுத் தேர்தலில் தமிழ் நாட்டில் காங்கிரஸ் தோல்வியடைந்த பிறகு பிரதமர் இந்திரா காந்தி தமிழ் நாட்டுக்குச் செல்வது இதுவே முதற்தடவையாகும்.



### அண்ணவை சந்திப்பார்

பிரதமர் இந்திரா காந்தி தமிழக முதல் மந்திரி திரு. அண்ணுதுரையை நாளை மதுரையில் சந்தித்துப் பேசவிருக்கிருர்.

இம் மாதம் 28-ந் திகதியன்று அவர் புதுடில்லிக்குத் திரும்புவாரெனத் தெரிகிறது.

## 'பிரிவினைச் சக்திகளை எதிர்த்துப் போராடுங்கள்'

### இந்திய மக்களுக்கு ராஷ்டிரபதி வேண்டுகோள்

பம்பாய், ஆக. 23

குறுகிய பிராந்திய மனப்பான்மைக்கும், வளர்ந்து வரும் பிரிவினைச் சக்திகளுக்கு மெதிராக மக்கள் போராடவேண்டுமென இந்திய ராஷ்டிரபதி டாக்டர் சாகிர் ஹுசெயின் வலியுறுத்தியுள்ளார்.

பம்பாய் நகரசபை தமக்களித்த வரவேற்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்ட கருத்தை தெரிவித்தார்.

### இந்தியாவின் கலாச்சாரம்

இந்தியா பல மொழி, பல மத நாடாகப் பல்லாண்டு காலமாகத் திகழ்ந்துவருவதாகக் கூறிய ராஷ்டிரபதி, வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே பன்னெடுங்காலமாக இந்தியாவின் கலாச்சாரமாக விளங்கிவருவதாகக் குறிப்பிட்டார்.

## 3 செங்காவலர் உயிருடன் தீ வைப்பு

பீகிங், ஆக. 23

சீனவிலுள்ள கிபிச்சோ மாகாணத்தின் தலைநகரான கிஷயாங்கில் மா-சே-துங் ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்கும் கடும் மோதல் நடைபெற்றுள்ளது.

மூன்று செங்காவலர்கள் உயிருடன் தீ மூட்டப்பட்டதாக மா ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## உரும்பராய் ப. ச. உப தலைவர்

உரும்பராய், புதன்

கடந்த 19-ம் திகதி நடைபெற்ற உரும்பராய் பட்டினசபையின் 2-வதுமாதாந்தக் கூட்டத்தில் அதன் உப தலைவராக திரு. அ. காராளசிங்கம் ஏகமனதாகத்தெரிவு செய்யப்பட்டார். இவரது பெயரை திரு. வ. நடேசலிங்கம் பிரேரிக்க திரு, குலசிங்கம் அனுவதித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி பலாத்கார வழக்கு

# பொலிஸ் கான்ஸ்டபிள் குற்றவாளி: தீர்ப்பு ஒத்திவைப்பு

சாவகச்சேரி, புதன்

''இரவு 9 மணிக்கு என் கணவரை வீட்டிற்கு வெளியே விட்டுவிட்டு என்னைக் கள்ளத்தோணி எனக் கூறி பொலிஸ் இன்ஸ்பெக்டர் என்னைக்கொண்டு வரச் சொன்னதாக என் தந்தையிடம் கூறி முதலாம் எதிரி தர்மசேன எனது கையில் பிடித்து இழுத்தார். அவர் பலாத்காரம் புரியப் போகிறுரென நினைத்து நான் கூச்சலிட்டேன். எனக்கு அப்போது மிகப் பயங்கரமாக இருந்தது.''

கிளிநொச்சி பலாத்கார வழக்கு சாவகச்சேரிமாஜிஸ்திரேட் திரு.கே.விக்னராஜா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டபோது சாட்சியமளித்த சிலுவைமுத்து பெண் அந்தோனியம்மா [24 வயது] மேற்கண்டவாறு கூறினுர்.

இவ்வழக்கில் இவ்வருடம் ஜனவரி 4-ம் திகதி கிளிநொச்சியில் இருதயம் சிலுவைமுத்து வீட்டினுள் டீ.ஏ. தர்மசேன, கைலாயபிள்ளை, அருணுசலம் ஆகிய மூவரும் இரவு நேரத்தில் சென்று சிலுவைமுத்து பெண் அந்தோனியம்மா மீது பலாத்காரம் புரிந்ததாக 4 குற்றச்சாட்டுக்களின் பேரில் கிளிநொச்சிப் பொலிசாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் முதல் எதிரி சார்பில் அட்வகேட் ஆர்.என்.கப்ரதல புரக்டர் வி.செல்லத்தம்பியின் அனுசரணையுடனும், இரண்டாம் எதிரி சார்பில் புரக்டர் எஸ். பி. மயில்வாகனமும் ஆஜராஞர்கள். மூன்ரும் எதிரிக்காக எவரும் ஆஜராகவில்லை. வழக்காளி தரப்பில் கிளிநொச்சிப் பொலிசாரினதும் புரக்டர் சி.பாலகிருஷ்ணனதும் அனுசரணையுடன் வி.என்.நவரத்தினம் வழக்கை நடத்திஞர்.

இ. சிலுவைமுத்து, வே.அருளானந்தம், ஜே. வி. பெமிசிங்கோ ஆகியோரும் சாட்சியமளித்தனர். முதல் எதிரியும் வாக்கு மூலமளித்தார். எதிரி தரப்பு தொகுப்புரை முடிவில் 2-ம், 3-ம் எதிரிகளை மாஜிஸ்திரேட் விடுதலை செய்து முதல் எதிரியை முதல் இரு குற்றச்சாட்டிற்கும் குற்றவாளியாகக் கண்டு தீர்ப்பை செப்டெம்பர் 4-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

---

யாழ். ஆஸ்பத்திரி வீதியில்

# வியாபாரத்தின் பெயரால் காடைத்தனம் நடக்கிறது

## முற்றுப்புள்ளி வைக்கும்படி விசேஷ ஆணையாளருக்கு கோரிக்கை

யாழ்ப்பாணம், வியா.

''யாழ்ப்பாண ஆஸ்பத்திரி முன் வீதியில் வியாபாரத்தின் பெயரால் பல கொள்ளைக் கோஷ்டியினரும் காடையர்களும் குடிகொண்டிருக்கின்றனர். இந்த வீதியில் நல்ல ஒழுக்கம் நிலவவும், பொது மக்களும், நோயாளரும் பயமின்றி நடமாடவும் மேற்படி வியாபாரங்களை ஒழித்துக் கட்ட உடன் நடவடிக்கை எடுக்கவும்'' என யாழ் மாநகரசபை விசேஷ ஆணையாளருக்கு யாழ்ப்பாணம் தமிழரசு வாலிப முன்னணி ஒரு மகஜரை அனுப்பியுள்ளது. யாழ்ப்பாண ஆஸ்பத்திரி நிர்வாகச் சீர்கேடும் கட்டுப்பாடற்ற வெளியார் நடமாட்டமும் உள் நோயாளர்களுக்கும், வெளிநோயாளர்களுக்கும், பொது மக்களுக்கும் பெரும் தொல்லையை விளைவிப்பதாகவும் இதனைத் தடுப்பதற்கு யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் ஒரு இரகசியப் பொலிஸ் கோஷ்டியை நியமித்து இந்த ஒழுங்கீனங்களைப் போக்கும்படியும் மேலும் அம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

### கலைக் கதம்ப விழா

பண்டத்தரிப்பு, புதன்

இளவாலை சென் ஜேம்ஸ் இநசவு நிலையத்தினர் புரட்டாதி மாதம் 10, 11ம் திகதிகளில் கலை கதம்பவிழா ஒன்றை நடத்த இருக்கின்றனர். இவ்விழாவில் நாடகம் நடனம் மற்றும் கலை நிகழ்ச்சிகளுடன் கைத்தொழில் பொருட்காட்சியும் இடம் பெற விருக்கிறது.

---

### 225-ம் ஆண்டு விழா

பண்டத்தரிப்பு, புதன்

இலங்கை கத்தோலிக்க இலக்கியத்தின் தந்தையான வண. கொன்சால்வெஸ் சுவாமியாரின் 225-ம் ஆண்டு விழா இங்குள்ள கத்தோலிக்கர்களால் கொண்டாடப்பட்டது.

---

### பரிசளிப்பு விழா

சுழிபுரம், புதன்

வலிகாமம் மேற்கு சன சமூக நிலையங்களின் பரிசளிப்பு விழா மானிப்பாய் அதிகார்செல்லமுத்து மண்டபத்தில் 25-ம் தேதி மாலை நடைபெறும். விழாவுக்குபிரதம விருந்தினராகவடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர் கலந்து கொள்வார். விழாவுக்கு இராசவாசல் முதலியார் சி. தியாகராசா தலைமை தாங்குவார். சமாஜ செயலாளர் திரு. த. துரைசிங்கம் திருமதி உருத்திரா கந்தசாமி மானிப்பாய் கிராமசபைத் தலைவர் சி. மார்க்கண்டு ஆகியோர் சிறப்புரையாற்றுவார்கள். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பிரதம விருந்தினர் எஸ். சி. மாணிக்கவாசகர் பரிசில்களை வழங்குவார்.

---

### கன்னியர் ஞானவொடுக்கம்

பண்டத்தரிப்பு, புதன்

திருக்குடும்ப கன்னியர்களுக்கான ஞானவொடுக்கத்தின் 2-ம்பிரிவு இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடத்தில்நடை பெவிருக்கிறது. 1-ம் பிரிவுக்கானஞானவொடுக்கக் இம்மாதம் 4-ம் திகதியுடன் ஆரம்பமாகி 12-ம் திகதியுடன் முடிவானது. 2-ம் பிரிவு 22-ம் திகதி தொடங்கி 29 ம் திகதியுடன் முடிவடையும்.

---

### பீகிங்கில் ....

[3-ம்பக்கத்தொடர்ச்சி]

**செங்காவலர் நடனம்**

அச்செய்தியின் பிரகாரம், சீனமக்கட்கும்பல்கள் பிரிட்டிஷ் தூதரகத்தைச் சுற்றிவளைத்ததாகவும், கட்டிடத்தின்மீது பெட்ரோல் டப்பாக்களை எறிந்து, கட்டிடத்துக்குத் தீ வைத்ததாகவும் தெரியவருகிறது. கட்டிடத்தினுள் இருந்த அலுமாரிகள், மற்றும் தளபாடங்களை இந்தக் கும்பல்கள் வெளியேஇழுத்துக்கொண்டு வந்து தீயினுள் போட்டனரென்றும், தீ ஜுவாலைகளைச் சுற்றி நின்று செங்காவலர் நடனமாடியதைச் சீனப் புகைப் படப்பிடிப்பாளர் படம் பிடித்ததாகவும் அப்பிரெஞ்சுச் செய்திகள் மேலும் தெரிவித்துள்ளன.

தீயணைப்புப் படையினர் தீயை அணைக்க முயன்றதாகவும், ஆனல், கட்டிடத்தை நோக்கிச் செங்காவலர் பெட்ரோல் டப்பாக்களை வீசுவதை அவர்கள் தடுக்கவில்லையென்றும் அச்செய்திகள் கூறியுள்ளன.

**நுழைய அனுமதி இல்லை**

கட்டிடத்தைச்சுற்றிநின்ற செங்காவலரும், சீனத்துருப்பினரும் வேறு எவரையும் கட்டிடத்தினுள் நுழைய அனுமதிக்கவில்லை யென்றும் அச்செய்திகள் தெரிவித்தன.

பிரிட்டிஷ் தூதரகப்பகுதியைப் பொலிசார் சுற்றிவளைத்து, யாரும் பிரவேசிக்கமுடியாது தடுத்துவிட்டனர் என்றும் அச்செய்திகள் கூறுகின்றன.

பீகிங்கிலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்தின்மீதான தாக்குதல், ஹொங்கொங்கிலுள்ள சீனப் பத்திரிகைகள்மீதான தடையை பிரிட்டன் 48 மணி நேரத்துக்குள் நீக்க வேண்டுமென்ற 'சீனு'வின் 'கெடு' முடிவடையும்நேரத்தில் நிகழ்ந்துள்ளதை பிரெஞ்சு செய்தித்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.

**ஹொங்கொங்கில்**

இதற்கிடையில், ஹொங்கொங்கில் உள்ள சீனப்பத்திரிகை நிர்வாகஸ்தர்கள் [illegible] விசாரணை [illegible] நடைபெறுகிறது.

---

# ''பரீட்சை சம்பந்தப்பட்ட ஊழல் இனி ஏற்படாது''

## கல்விப்பகுதியின் நடவடிக்கைக்கு பாராட்டு

வெள்ளவத்தை, புதன்

''இவ்வளவு காலமும் தொழில் நுட்பத்திணைக்களம் நடாத்திவந்த கனிட்ட தொழில் நுட்பக்கல்லூரிப் பரீட்சைகள் சகலதையும் இம்முறை முதல்தடவையாகக் கல்விப்பகுதியினர் பொறுப்பேற்று நடாத்த முன்வந்திருப்பது பாராட்டிற்குரியதாகும். இனிமேல் கனிஷ்ட தொழில்நுட்டக் கல்லூரிப் பிரவேசப் பரீட்சைகளையும் பரீட்சைப் பகுதியினரே நடாத்துவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவற்றுல் பரீட்சைகள் சம்பந்தப்பட்ட ஊழல்கள் ஏற்படாதவாறு தடைசெய்ய உதவியாகவிருக்கும்''.

இவ்வாறு பம்பலப்பிட்டி வஜ்ரா வீதியில் 2-ஏ இலக்க மண்டபத்தில் நடைபெற்ற யாழ். கனிஷ்ட தொழில்நுட்பக்கல்லூரியின் கொழும்பிலுள்ள பழைய மாணவர்கள் சங்கக்கூட்டத்திற்குத் தலைமைவகித்த திரு. சி. சிவபாதசுந்தரம் பேசுகையில் கூறினுர். அவர் மேலும் பேசுகையில் 'கனிஷ்ட தொழில்நுட்டபக்கல்லூரிகளில் ஆங்கிலத்திற்கு முக்கியத்துவமளிக்க வேண்டும் என்றும் தமிழ் வணிசப்பகுதி மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் போதிய தகுதியை அளிக்க வேண்டும்' என்றும் கூறினுர்.

திரு க. பேரம்பலம் பேசுகையில், ''கல்வி அமைச்சர் முன்னர் தெரிவித்தபடி எமது யாழ். கனிஷ்ட தொழில் நுட்பக்கல்லூரியின் தரத்தை இனியும் தாமதிக்காமல் உடனடியாக உயர்த்தவேண்டும். அதன் பின்னர் தமிழிலும் ஆங்கிலத்திலும் டிப்ளோமா பயிற்சிகளை வணிகத்துறைக்கு நடாத்தவேண்டும் இவ்வகுப்புகளை வருகிற 1967-ம், 68-ம் ஆண்டுகளுக்குரிய கழக வாண்டில் நடாத்த வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

அகில இலங்கைத் தமிழ் தட்டெழுத்தாளர் சங்கச் செயலாளர் திரு. ம. சிங்கராயர் பேசுகையில், எதிர்காலத்தில் தமிழ்த் தட்டெழுத்து - சுருக்கெழுத்துக் கலைகளுக்கு நல்ல முன்னேற்றமும் அவசர தேவையும் இருக்கிறதென்றும் தற்போது இவற்றைப் பயின்று கொண்டிருக்கும் மாணவர்கள் இன்னும் ஊக்கமுடன் பயில வேண்டும் என்றும் கூறினுர்.

சிரமதானத்துறையிலும் விவசாயத்துறையிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் கல்லூரி அதிபர் திரு. க. நாகலிங்கத்திற்குப் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது.

திரு. ௭. தவராசா நன்றி கூறினுர்.

---

### பரித்தியாகிகளின் சிரேஸ்டர் விஜயம்

பண்டத்தரிப்பு புதன்

ஓ.எம்.ஐ. என்று ஆங்கிலத்தில் கூறப்படும் அமலோற்பவ பரித்தியாகிகளின் சிரேஷ்டர் ரோமிலிருந்து இலங்கைக்கு விஜயம் செய்து ஆங்காங்கே தொண்டாற்றும் சபையின் குருமார்களைச் சந்தித்தார். இளவாலைப் பகுதிக்குப் இவர் விஜயம் செய்தார். கத்தோலிக்க உலகம் முழுவதும் அமலோற்பவ பரித்தியாகிகள் தொண்டாற்றுகிறுர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

---

### இளைப்பாறும் ஆசிரியர்

புன்னாலைக்கட்டுவன், புதன்

வதிரி திருஇருதயக் கல்லூரி சிரேஷ்ட ஆசிரியரான திரு. பி. மரியாம்பிள்ளை அடுத்த மாத இறுதியில் இளைப்பாறுவதைமுன்னிட்டு மேற்படி கல்லூரி ஆசிரியரும், மாணவரும் 'அவருக்கு விருந்துபசாரம் அளித்துக் கௌரவிக்கவிருக்கின்றனர்


கோயில் தேவைகளுக்கும், விவாகம் முதலிய விசேஷ வைபவங்களுக்கும் உபயோகமான

**அபிஷேக சந்தனம்**

கோயில் அபிஷேக திரவியங்கள்,
வாசனைமிக்க பன்னீர்
பரிமளம் நிறைந்த சந்தன வில்லைகள்

**விளைவு தூடம்**

கிடைக்குமிடம்

**சுந்தரம் பிரதர்ஸ்**

மருந்துச்சரக்கு வியாபாரம்

[புதிய பஸ்நிலையத்துக்கு அருகாமை]

73, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.



**நீங்கள் கேளுங்கள்!**




சிங்கம் மார்க்

**சந்தனாதித் தைலம்**

வாங்கி உபயோகியுங்கள், எங்கும் கிடைக்கும்.

தயாரிப்பாளர்கள்: போன் 2300 & 3200

**ப.மு.சேன்ஸ்.**

88, செட்டியார்தெரு, கொழும்பு 11.

ஈழவள நாட்டிலே எங்குமே கிடைக்கும்!!

யாழ்ப்பாண மாவட்ட ஏஜண்ட்:

என். எம். எஸ். அன்ட் பிரதர்ஸ்,
கே. கே. எஸ், ரோட், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொக்குவில் கிராமச் சபை
## கேள்வி பற்றிய அறிவித்தல்

கொக்குவில் கிராமச் சபை அக்கிராசனரால் 30-8-67 புதன்கிழமை மாலை 3 மணி வரை கீழ்க்காட்டிய வேலைக்கு சீல்வைத்த கேள்விப்பத்திரங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

(1.) கோண்டாவில் புகையிரதப் பாதைக்குக் கிழக்கேயுள்ள வீதி.

2. கேள்விகள் கிராமச் சபைக் கந்தோரில் அதன் பொருட்டுவைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் போடப்படுதல் வேண்டும். அல்லது கிராமச் சபைக்கு கிராமச் சபை அக்கிராசனரின் விலாசத்திற்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். அல்லது 30-8-67 மாலை 3 மணிக்கு நடைபெறவிருக்கும் கிராமச் சபைக் கூட்டத்தில் 3 மணிக்குப் பிந்தாமல் கொடுக்கப்படுதல் வேண்டும்.

3. கேள்விகள் உத்தியோக பூர்வமான பத்திரங்களில் எழுதிக் கொடுக்கப்படுதல் வேண்டும் அப்பத்திரங்கள் அதன்பொருட்டு தனித் தனி ரூபா 25/- 29-8-67 மாலை 2 மணிக்கு முன்பு இக்கந்தோரில் பிணை கட்டப்பட்டதும் அக்கிராசனரால் வழங்கப்படும்.

4. கேள்விகளிலுள்ள சகல விதமான மாற்றங்களும் அழித்தல்களும் கேள்விக்காரரின் கையொப்பத்தால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். அவ்விதம் உறுதிப்படுத்தத் தவறினுல் அக்கேள்வி நிராகரிக்கப்படும். கேள்வியின் பிரதியொன்று அதே நேரத்தில் யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவியாணையாளருக்குக் கிடைக்க அனுப்புதல் வேண்டும்.

5 அவரது கேள்வி ஏற்றுக் கொள்ளப்பட்டதென்று கிராமச் சபை அக்கிராசனரால் அறிவிக்கப்பட்ட இரு வாரங்களுக்குள் ஒப்பந்தம் செய்துகொண்டு வேலை ஆரம்பிக்கத் தவறும் எக்கேள்விக்காரரதும் கேள்விப் பிணைப்பணமான ரூபா 25/- திருப்பிக் கொடுபடமாட்டாது. அவ்விதம் தவறின் அடுத்த குறைந்த கேள்வி ஏற்கப்படும்.

ஒப்பம் சி. அருளம்பலம்
அக்கிராசனர்,
கொக்குவில்.
89 கிராமச் சபை.

## கேள்விவிளம்பரம்

1. அச்சுவேலிக் கிராம சபைக் கந்தோர் கட்டட விஸ்தரிப்பு.

2. தண்ணீர்த் தாங்கி கட்டி, தண்ணீர் இறைக்கும் இயந்திரம், குளாய் என்பன பொருத்தி விடுதல்.

மேற்குறிப்பிட்ட வேலைகளுக்குச் சீல்வைத்த கேள்விப்பத்திரங்கள் அச்சுவேலிக் கிராம சபைத் தலைவரால் 2-9-67ந் திகதி சனிக்கிழமை காலை 9-30 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனி கேள்விப் பிணைப் பணம் ரூபா 25/-ம், பத்திரப் பணம் ரூபா 5/-ம், கட்டியவர் தன் பேரில் 1-9-67-ந் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்.

ஏனையவிபரங்களைக் கிராம சபை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

சி. த. சபாரத்தினம் ஜே. பி.
தலைவர்,
கி. ச. அச்சுவேலி.
கிராமசபை அலுவலகம்,
அச்சுவேலி, 21-8-67 92

## அடைவு நகை ஏலவிற்பனவு

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 222-ம் இலக்கக் கடையில் கந்தையா பரமு அவர்களிடம் 27-4-65 தொடக்கம் 31-12-65 வரைக்கும் வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவைகளை 5-9-67 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் மேற்படி கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏலவிற்பனவாளர்.
வண்ணார்பண்ணை. 80

## எம். ஜி. ஆர். — ராதா வழக்கு
# 'என்மடிவு' என்ற கடிதத்தை நீரும் தி. மு. க. வினரும் தயாரித்தீர்களா?
## "இல்லை" வழக்கறிஞரின் கேள்வியும் எம். ஜி. சக்ரபாணியின் பதிலும்

சென்னை, ஆக. 23

எம். ஜி. ஆர். - எம். ஆர். ராதா துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்குப் பிறகு ராதாவின் பாக்கெட்டிலிருந்து பொலிசாரினுல் கண்டெடுக்கப்பட்ட ராதாவின் கையெழுத்துடனுன 'என் மடிவு' என்ற கடிதம் பற்றி ராதாவின் வழக்கறிஞர் வானமாமலை எம். ஜி. ஆரின் அண்ணன் எம். ஜி. சக்ரபாணியிடம் கேட்டார். தி. மு. க. வினரும், அவரும் சேர்ந்தே அந்தக் கடிதத்தைத் தயாரித்ததாக சாட்சியமளித்த சக்ரபாணியிடம் கேட்ட கேள்வியொன்றில் குறிப்பிட்டு எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டார்.

[வரும் இந்திய பொதுத் தேர்தலுக்கு முன்னர் 'உயிர்த்தானம்' செய்ய வேண்டுமென அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருப்பது தெரிந்தது.] சாட்சி சக்ரபாணி அதனை மறுத்தார். எம். ஜி. சக்ரபாணி நேற்று மூன்று மணி நேரம் விசாரணை செய்யப்பட்டார்.

சினிமா நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனை சுட்டுக் கொலை செய்ய முயன்றதாகவும், தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்ய முயற்சித்ததாகவும் மற்றொரு சினிமா நடிகர் எம். ஆர். ராதாமீது குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்குநேற்றுத்தொடர்ந்து சென்னை செஷன்ஸ் கோர்ட்டில் நீதிபதி லக்சுமணன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எம். ஜி. ராமச்சந்திரனின் அண்ணன் எம். ஜி. சக்ரபாணி நேற்று விசாரணை செய்யப்பட்டார்.

முடிக்குரிய வழக்கறிஞர் திரு. பி. கே. கோகுலகிருஷ்ணன் சாட்சியை குறுக்குவிசாரணை செய்த போது சாட்சி கூறியதாவது:

தம்பி எம். ஜி. ராமச்சந்திரன் ராயப்பேட்டை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக எனக்கு முதலில் தகவல் கிடைத்தது. நான் உடன்டியாக ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்கு விரைந்தேன். எம். ஜி. ஆருக்கு எவ்வித ஆபத்துமில்லையென்று அங்கு தெரிவிக்கப்பட்டது. பின்னர் பட அதிபர் வாசு, ராதா எம். ஜி. ஆரைச் சுட்டதாகவும், தன்னைத் தானே சுட்டதாகவும் கூறினுர். ரிவால்வர் களிருந்தது. ரிவால்வரை என்ன செய்வது என்பது சம்பந்தமாக சட்ட ஆலோசனை கேட்பதற்காக வழக்கறிஞர் வி. பி. இராமன் இல்லத்துக்குச் சென்றேன். அவரின் ஆலோசனைக்குப் பிறகு ரிவால்வர் ராயப்பேட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது.

பொலிஸ் நிலைய வராந்தாவில் நான் நின்றேன். வாசு உள்ளே போனுர்.

### மூன்று தோட்டா சுடப்பட்டிருந்தது

பொலிஸ் உத்தியோகத்தர் றிவால்வரைத் திறந்து பார்த்த போது மூன்று தோட்டாக்கள் சுடப்பட்டிருப்பதை காணக்கூடியதாகவிருந்தது. வாசு அணிந்திருந்த சேர்ட்டில் இரண்டாவது தெறி இல்லாதிருந்தது.

பின்னர் ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். ஆனுல் அங்கு பெரிய ஜனக்கூட்டம் இருந்ததால் வீட்டுக்குத் திரும்பி விட்டேன். அப்போதுமணி 7-15. இரு நாட்கள் என்னைப் பொலிசார் விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பு வழக்கறிஞர் திரு. என். ரி. வானமாமலை சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார். குறுக்கு விசாரணையின் போது சாட் கூறியதாவது:-

சில படங்களில்நான்நடித்திருக்கிறேன். 'மலைக்கள்ளன்' என்ற படத்தில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பாத்திரம் ஏற்று நடித்துள்ளேன். எம். ஜி. ஆர். எம். ஜி. ஆர். பிக்சர்ஸில் பங்குதாரராக இருக்கிருர். எம. ஜி. ஆர். நடித்த படங்களையே எம். ஜி. ஆர். பிக்சர்ஸ் வெளியிட்டு வந்துள்ளது.

படத்தில் நடிப்பதன் மூலம் கிடைக்கும் பணத்துடன், அந்தப் படத்தை விநியோகிப்பதன் மூலம்கிடைக்கும் வருமானத்தையும் எம். ஜி. ஆர். எடுத்துக் கொள்வார் என்ற எதிரி தரப்பு வழக்கறிஞர் தெரிவித்ததை சாட்சி மறுத்தார். சத்தியா மூவிஸ், எம். ஜி. ஆர். பிக்சர்ஸ்சுகளுக்குமே அப்படியான வருமானம் சேரும் என்றும் சாட்சி கூறினுர்.

எம். ஜி. ஆருக்கு சரியாக எவ்விடத்தில் காயம் ஏற்பட்டதென்பது எனக்குத் தெரியாதென்றும் சாட்சி தெரிவித்தார்.

ஜனவரி 14-ந் தேதி சாட்சி அளித்தவாக்கு மூலத்தில் எம். ஜி. ஆரின் இடது பக்கக் காதில் காயம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்திருப்பதாக எதிரி தரப்பு வழக்கறிஞர் சுட்டிக் காட்டினுர். துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்த இடத்தைத் தெரிவித்ததாகவும் குறிப்பாக எவ் விடத்தில் சூடுபட்டு காயம் ஏற்பட்டது என்பது பற்றி தெரிவிக்கவில்லையென்றும்சாட்சி கூறினுர்.

### எம். ஜி. ஆருடன் ஆலோசிக்கவில்லை

பொலிஸாருக்கு வாக்கு மூலமளிக்கு முன்னர் எம். ஜி. ஆருடன் எவ்வாறு சாட்சியமளிப்பது என்பது பற்றி சாட்சி ஆலோசனை செய்தாரென்ற எதிரிதரப்பு வழக்கறிஞரின் குற்றச்சாட்டை சாட்சி சக்கரபாணி மறுத்தார்.

ராயப்பேட்டை பொலிஸ் நிலையத்தில் தன்னை நிற்கும்படி கேட்டதாக வாசு கூறியபோது, தாம்வாசுவை எதற்காக நிறுத்திவைத்திருக்கிருர்களென்று ஆச்சரியப்படவில்லையென சாட்சி தெரிவித்தார்.

எம். ஜி. ஆர். தோட்டத்தில் இந்த சூட்டுச்சம்பவம் நடந்தபடியால்தான், ராதாவின் நண்பரான வாசு, ராதாதான் எம். ஜி. ஆரை சுட்டாரென்று சொல்லியிருக்கலாமென தாம் வாசு மீது சந்தேகப்படவில்லையென்று சாட்சி ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினுர்.

[6-ம் பக்கம் பார்க்க]

## திருமலையில் யாழ். கிறீன்பீல்ட் மோதும்

யாழ்ப்பாணம், வியா.

திருக்கோணமலை சென். ஜோசப் கல்லூரியின் ஆதரவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் அகில இலங்கை கழகங்களுக்கிடையேயான உதைபந்தாட்டப் போட்டியில் யங். மாத்தளையன் கோஷ்டியும் யாழ்ப்பாணம் கிறீன்பீல்ட் கோஷ்டியும் திருகோணமலை விளையாட்டு அரங்கில் பெரும் மோதலில் ஈடுபடவிருக்கின்றன. இப்போட்டி எதிர்வரும் 26-ந் திகதி நடைபெறவிருக்கிறது.

அகில இலங்கையின் கழகச் சம்பியனுக்கான போட்டியில் யாழ்ப்பாணத்திலிருந்து கிறீன்பீல்ட் கோஷ்டி மட்டுமே கலந்துகொள்கின்றது. இக்கோஷ்டிக்கு திரு. ஏ. தேவராசா தலைமை தாங்குகின்றுர். (வி. நி.)


## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

உதிரிப்பாகங்கள்:
சகல தேமஸ் (THERMOS) உதிரிப்பாகங்களும் மீண்டும் விற்பனைக்கிருக்கிறது. அரிய சந்தர்ப்பம்! பயன்படுத்திக் கொள்ளுங்கள். எஸ். சவிரிமுத்து. 73, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 2311

### தேவை

கௌண்டர் கிளாக்-
யாழ்ப்பாணத்தில் மின்சார உபகரணங்கள் விற்பனை செய்யும் ஸ்தாபனமொன்றிற்கு, 5 வருடங்களுக்குக்குறையாத வியாபார அனுபவமும், ஆங்கில அறிவுமுடைய கௌண்டர் கிளாக் தேவை. விரும்புவோர் இதற்குமுன் வேலைசெய்த ஸ்தாபனங்களின் நற்சாட்சிப் பத்திரங்களுடன் விளம்பர இல. 2316 மே/பா 'ஈழநாடு' யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு எழுத்து மூலம் 31-8-67க்கு முன் விண்ணப்பிக்கவும். 2316

அச்சுக் கோர்ப்பவர்கள்:
அனுபவமுள்ள தமிழ் எழுத்துக் கோர்ப்பவர்கள் (கம்போசிட்டர்கள்) தேவை. சம்பளம் அரசாங்க விகிதப்படி. கலைவாணி அச்சகம், 10, மெயின் வீதி, யாழ்ப்பாணம். 2312

## 2-வது வெற்றி மாதம்!

லிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] — பிளாஸா [வெள்ளவத்தை]
விஜிதா [ஹட்டன்] — வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
விஜயா [மட்டக்களப்பு] — மொடேர்ன் [பதுளை]

தென்னகமெங்கும் வெற்றி எட்டுத்திக்கு மெட்ட கொட்டுமுரசு கொட்டி 100 நாட்களுக்கு மேல் ஓடிய எழில் வண்ண ஓவியம்!

புதுமை நிறைந்த பொழுதுபோக்குச் சித்திரம்

மக்கள் திலகம் எம். ஜி. ஆர்.—சரோஜாதேவி
அசோகன் - நாகேஷ் - மனேரமா - ராமதாஸ்
ரி. ஆர். ராமச்சந்திரன் - மாதவி
நடித்த




ஏவி. எம். புரொடக்ஷன்ஸ்
# அன்பே வா
(ஈஸ்ட்மென் கலர்)

கதை, டைரெக்ஷன்: ஏ. ஸி. திரிலோகசந்தர் — இசை: மெல்லிசை மன்னர் எம். எஸ். விஸ்வநாதன்

### ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA.
தினசரி 2-30, 6-30, 930
விடுமுறைதினங்களில் 4 காட்சிகள்
ஏ. வி. எம், ராஜன் கே. ஆர். விஜயா நடித்த
மனம் ஒரு குரங்கு

### நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
சிவாஜி—தேவிகா நடித்த
ஆண்டவன்கட்டளை

### மனேஹரா
[யாழ்ப்பாணம்]
பி.ப. 4-45, 7-00, 9-45.
Horst Bucholz
Sylva Koscina
in
THAT MAN IN ISTANBUL
(Secret Agent Film)

### REGAL JAFFNA
Time: 4-30 7-00 p. m. 9-45 p. m.
The Three Stooges go around the world In A Daze


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சீன, அமெரிக்கா, ரஷ்யா எதுவாயிருந்தாலு

# 'நட்புறவை விரும்புகிறேம் ஆனல் பயமுறுத்தலே அல்ல'

## பிரதிநிதிகள் சபையில் பிரதமர் விளக்கம்

கொழும்பு, செவ்வாய்

சீனவுடன் இலங்கை மிக நெருங்கிய நட்புடன் இருக்கவிரும்புகின்றது. ஆனல்சீன மட்டுமல்ல அமெரிக்கா அல்லது சோவியத் ரஷ்யாவாகவிருந்தாலும் எம்மைப் பயமுறுத்துவதையோ எமக்கு உத்தரவுகள் போடுவதையோ அனுமதிக்க முடியாது. அப்படி முயற்சி செய்பவர்களுடன் கடுமையாகவேநடந்து கொள்வோம்.

இவ்வாறு பிரதம மந்திரி திரு. டட்லிசேனநாயகா இன்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் கூறினர்.

பிரதம மந்திரியின் அமைச்சுக்கும் பொலிஸ்இலாகாவுக்குமான மான்யப் பிரேரணையின்மீதான விவாதத்துக்கு பிரதம மந்திரி சபையில் பதிலளித்தார்.

சீனவுடன் இலங்கைவெகு நாட்களாக தொடர்பு கொண்டிருக்கின்றது. நான் முதல் தடவை பிரதம மந்திரியாக இருந்தபோது சீன-இலங்கை ரப்பர் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. நாம் ஒரு சீனவைத்தான் அங்கீகரித்திருக்கிறேம் என்றும் பிரதமர் கூறினர்.

அண்மையில் சீனத்தூதரகம் அரசாங்கத்துக்கு எழுதிய குறிப்பொன்றைப்பற்றியும் அதற்கு அரசாங்கம் அளித்த பதில் பற்றியும்பிரதமர் குறிப்பிட்டார்.

இம்மாதிரி சம்பவங்கள் இதரநாடுகளிலும் இடம் பெற்றிருக்கின்றன வென்றும் அவர் சுட்டிக்காட்டினர்.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்கீழ் இந்தியாதிரும்புபவர்கள் சம்பந்தமான செலாவணி அம்சங்கள்குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அடையாள அட்டைகள் சம்பந்தமான மசோதா மிகவிரைவில்சபையில் சமர்ப்பிக்கப்படும் என்றும்பிரதமர் தெரிவித்தார்.

வடக்கில் சமூக சௌஜன்யம் ஏற்படவும் குறைபாடுகளைத் தீர்த்துவைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதமா தெரிவித்தார்.

பிரதமர் பதிலளித்த பின்னர்மான்யக் கோரிக்கையை சபை ஏற்றுக் கொண்டது.

---

## நேருவின் 'மது' மரணம்

புதுடில்லி, ஆக. 23

காலஞ்சென்ற பிரதமர் ஜவஹர்லால் நேருவின் அன்பிற்குரியதாக இருந்து வந்த 'மது' என்ற நாய் இன்று மிருக வைத்திய சாலையொன்றில் மரணமானது. பிரதமர் இந்திரா காந்தியின் முன்னிலையில் 'மது'வின் உடல் அடக்கம்செய்யப்பட்டது.

---

## அகில இலங்கை விளையாட்டுக் குழு

திருக்கோணமலை, புதன்

1962-ம் ஆண்டு ஈழத்தின் சிறந்த விளையாட்டுக் குழுவாகத் தெரிவுசெய்யப்பட்ட திருக்கோணமலை சென். ஜோஸெப் கல்லூரி உதைபந்தாட்டக் குழு, சிலாபம் கோல்டன் நைஸ் குழுவினரோடு இறுதி ஆட்டத்தில் திருமலை சுற்றுமதிலரங்கில் கலந்துகொண்டு 5-2 கோல்களால் வெற்றிவாகை சூடி அகில இலங்கை விளையாட்டுக்குழு [இளைஞர் அணி]வாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

---

## மூதூர் செய்திகள்

நமது நிருபர் ஏ. தர்மராசா

### பாடசாலைக்கு புதிய மண்டபம்

மூதூர், புதன்

திருகோணமலை பிரதான வீதியிலுள்ள மெதடிஸ்த மிஷன் சிரேஷ்ட பாடசாலையில் புதிய வகுப்பறைகளைக் கொண்ட மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இடநெருக்கடி காரணமாக இதுவரை இங்குபயிலும் மாணவமாணவிகளும் ஆசிரியர்களும் பெரிதும் கஷ்டப்பட்டு வந்தனர். பாடசாலை விருந்தைகளிலும் மற்றும் ஒதுக்குப் புறங்களிலும் கல்வி போதிக்கப்பட்டு வந்த மாணவ மாணவிகள் அடுத்த மாதம் ஆரம்பிக்க விருக்கும் 3-வது தவணையிலிருந்து புதிய வகுப்பறைகளில் வசதியாகவிருந்து தமது கல்வியைப் பெறுவாரென அறியப்படுகிறது. பாடசாலை இடநெருக்கடி காரணமாக பல தடவை முறைப்பாடு செய்யப்பட்டதன் காரணமாகதிருகோணமலை எம். பி. திரு. எஸ். எம். மாணிக்கராஜாவின் பெருமுயற்சியால் புதிய மண்டபம் உருவானது.

### நியூஸ்ஏஜன்ட் ஏமாந்தார்

யாழ்ப்பாணத்திலிருந்து புதிய தினசரிப் பத்திரிகையொன்று வெளிவரவிருப்பதாகவும் இதற்கு செய்தி நிருபர்களும் முற்பணம்கட்டக்கூடிய விற்பனை ஏஜண்டுகளும் தேவையென்றும் பிரபல தினசரிகளில் விளம்பரம் செய்யப்பட்டிருந்ததாகவும், இதனைக் கண்ணுற்ற மூதூர்ப் பத்திரிகை ஏஜெண்ட் ஒருவர் முற்பணம் அனுப்பி தாம் பெற விரும்பும் பிரதிகளின் தொகையையும் குறிப்பிட்டிருந்ததாகவும் ஆனல் இதுவரை புதிய பத்திரிகைப்பிரதிகள் தமக்குக் கிடைக்கவில்லையெனவும், அப்படியொரு புதிய பத்திரிகை இதுவரை யாழ்ப்பாணத்தில் வெளிவந்ததாகத் தெரியவில்லையெனவும்இது ஒரு மோசடியாக இருக்க வேண்டுமெனவும் அந்த மூதூர் 'நியூஸ்ஏஜெண்ட்' கவலையுடன் தெரிவித்தார். இது குறித்து தாம் பொலிஸ் நடவடிக்கை எடுக்கவிருப்பதாகவும்அவர் கூறினர்.

### இடமாற்றம்

மூதூர் அரசினர் மகா வித்தியாலயத்தில் கடந்த 4 ஆண்டுகளாக உப அதிபராயிருந்து ஞான ஆசிரியராகக் கடமையாற்றி வந்த திரு. கே. வல்லிபுரநாதன் அடுத்த மாதத்திலிருந்து திருமலை இந்துக் கல்லூரிக்கு இடமாறிச்செல்கிறர். அவரது இடத்திற்கு திருமலை இந்துக்கல்லூரியிலிருந்து திரு. எஸ். கணேஸ்இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். திரு. வல்லிபுரநாதன் மேற்படி மகாவித்தியாலயத்தில் உதவி அதிபராய் கடமையாற்றினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

---

## டாக்டர் மனைவி கொலை வழக்கு

## எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் அட்டோர்ணி ஜெனரலை சந்திப்பர்

காலி, செவ்

திருமதி பத்மினி கொலை வழக்கில் எதிரிகள் சார்பில் ஆஜராகியிருக்கும் வழக்கறிஞர், அட்டோர்ணி ஜெனரலைச் சந்திப்பதற்கு காலி பிரதம மாஜிஸ்திரேட் இன்று அனுமதியளித்தார்.

மூன்று வாரங்களுக்கு முன்னர் காலி கூட்டு மாஜிஸ்திரேட் திரு. கொலின் மெண்டிஸ், டாக்டர் டி. ஜி டி எஸ். குலரத்ன, அவரது தயார் திருமதி லோரா குலரத்ன. அவர்களது வேலைக்காரப் பெண்ணுன எம். ஜி. சோபியா ஆகிய மூவர்மீதும் தொடரப்பட்டிருந்த இந்த வழக்கை சுப்ரீம் கோர்ட்டுக்குப் பாரப்படுத்தினர்.

இன்று பிரதம மாஜிஸ்திரேட் முன்னிலையில் வழக்கறிஞரின் மனு பற்றி பிரதமமாஜிஸ்திரேட் முடிவு தெரிவிப்பதற்காக டாக்டர் குலரத்ன, அவரது தயார் திருமதி லோரா குலரத்ன, அவர்களது வேலைக்காரப் பெண்ணுன எம். ஜி. சோபியா ஆகிய மூவரும் விளக்கமறியலில் இருந்து கொண்டுவரப்பட்டு பிரதம மாஜிஸ்திரேட்டின் முன் ஆஜர்செய்யப்பட்டனர்.

இந்த வழக்கில் 4வது எதிரியாக இருந்த எம். சிசின்மீது எதிரான சாட்சியங்கள் எதுமில்லாததால் இவரைக் கூட்டு மாஜிஸ்திரேட் விடுதலை செய்திருந்தார்.

டாக்டர் குலரத்ன [பத்மினியின் கணவர்], அவரது தாயார் திருமதி குலரத்ன, அவர்களது வேலைக்காரப் பெண்ணுன சோபியா ஆகியோர்மீது திருமதி பத்மினியைக் கொலைசெய்யச் சதி செய்ததாகவும், கொலை செய்ததாகவும் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

---

## திருக்கேதீச்சரத்தில் சர் கந்தையா வைத்தியநாதன் நினைவு விழா

திருக்கேதீச்சரம், புதன்

காலஞ்சென்ற சிவமணி சேர் கந்தையா வைத்தியநாதனின் நினைவு விழா, இளைப்பாறிய உயர்நீதிமன்ற நீதியரசர் திரு. பொன். ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் இம்மாதம் 27-ந் திகதி காலை திருக்கேதீச்சரம் திருஞானசம்பந்தர் மடத்தில் சிவமணி சேர் கந்தையா வைத்தியநாதன் மன்றத்தின் ஆதரவில் நடைபெறவிருக்கின்றது.

காலை நிகழ்ச்சிகளில், சிவமணியின் திருஉருவப் படத்தை மன்னர் அரசாங்க அதிபர் திரு. கே. நேசையா திரைநீக்கம் செய்துவைப்பார். ஞாபகச் சின்னமும் ஸ்தாபிக்கப்படும். தலைவர் முன்னுரை, மௌன அஞ்சலி, அன்னரின் சேவையைப் பாராட்டி திரு. கே. சி. லோகேஸ்வரன் [காரியாதிகாரி, மாந்தை], பி. பறுணந்து [அக்கிராசனர், திருக்கேதீச்சரம் கிராமசபை], புலவர் த. குமாரசுவாமிப்பிள்ளை ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள். நண்பகல் 12 மணியளவில் தலைவர் முடிவுரையுடன் காலை நிகழ்ச்சிகள் முடிவுறும்.

மாலை நிகழ்ச்சிகள் மாலை ஆரம்பமாகும். சொற்பொழிவுகளில் செல்வன் பொன்னையா சேதுராமலிங்கம், மன்னர் எம். பி. திரு வி. ஏ. அழகக்கோன், ஜனப் ஏ. ரஹீம், ஜனப் எம். முகமது காசீம், திரு. ஆ. சிதம்பரப்பிள்ளை, புலவர் திரு. சு. செல்லத்துரை, திரு. க. சுந்தசாமி [கரவைக்கிழான்] ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

இசைநிகழ்ச்சி, நாடகம் ஆகியனவும் இடம்பெறும்.

இறுதியாக கலைநிகழ்ச்சிகளில பங்குபற்றிய கலைஞர்களுக்கு திருமதி தே. நேசையா பரிசில்கள் வழங்குவார்.

---

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வியாழன் 24-8-67

**செய்திகள்:** காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி. 6-35 சைவநற்சிந்தனை—பேரம்பலம்செல்லையா, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 எங்கள் அதிதி.

இரவு 6-15 தமிழோடிசைபாடல், 6-30 பேச்சு, 6-45 கிராமசஞ்சிகை, 7-15 தாளவாத்தியக்கச்சேரி, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 இசைக் கச்சேரி — சத்தியபாமா இராசலிங்கம்.

---

## 'என்மடிவு' . . .

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ராதாவின் கையெழுத்துடன் உள்ள 'என்மடிவு' என்ற கடிதம் சாட்சியினுலும், தி. மு. க. வினராலும் சேர்ந்து தயாரிக்கப்பட்டதென்ற எதிரிதரப்பு வழக்கறிஞரின் கேள்வியை சாட்சி சக்ரபாணி மறுத்தார்.

---

## துணுக்காயில் சிரமதானம்

யாழ்ப்பாணம், வியாழன்

துணுக்காய்ப் பகுதியில் உணவு உற்பத்தி இயக்கம் துரிதமாக முன்னேறி வருகிறது. சிரமதான இயக்கவேலைகள் இப்பகுதிமக்களிடையே வேகமாகப்பரவியுள்ளது.

துணுக்காய் 6-ம்பகுதியைச்சேர்ந்த யோகபுர குடியேற்ற வாசிகள், துணுக்காய்ப்பகுதி காரியாதிகாரி எம். தம்பிமுத்து தலைமையில் உத்தியோகத்தர்களின் ஆதரவுடன் சிரமதானம் மூலம் வாய்க்கால் வெட்டி திருத்தினர்கள். காணி அபிவிருத்தி மேற்பார்வை அதிகாரி, கிராம முன்னேற்ற அதிகாரிகளும் இப்பணியில் கலந்து கொண்டனர்.

---

## வல்வைக்கு . . . .

[-ம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டதைத் தொடர்ந்து விரைவில் வல்வெட்டித்துறை பட்டினசபை பகுதிக்கு குடிநீர் விநியோகத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் உறுதி கூறியுள்ளார்.

அமைச்சின் பகுதி நெருக்கடியை அமைச்சர் அவர்களிடம் சுட்டிக்காட்டியபோது, வல்வெட்டித்துறைப்பகுதிக்கு தேவையான குடிநீரை வழங்குவதற்கு வல்வெட்டித்துறையிலேயே ஒரு வற்ருக் கிணறு இருப்பதை அமைச்சரின் கவனத்திற்கு அவர்கள் கொண்டு வந்தனர்.

இந்த வற்ருக்கிணறைப் பற்றி ஆராய்வதற்கு நிபுணர்கள் அனுப்பப்படுவார்களென்றும், அதன் பின்னர் குடிநீர் விநியோகத் திட்டம் ஆரம்பிக்கப்படுமென்றும் அமைச்சர்தெரிவித்துள்ளார்

---

இப் பத்திரிகை 'ஈழநாடு' லி மிட்டெட் ஸ்தாபனத்தாரால்யா ப்பாணம் சிவன் கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24-ந் திகதி அச்சிட்டு வெளியிடபட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org